விகடன்
vikatan.com

# பல் இல்லாத நகர சபைகள்!

கிராம சபை உங்களுக்குத் தெரியும். கடந்த சில ஆண்டுகளாக அதுபற்றிய விவாதம் ஓடிக் கொண்டிருக்கிறது. உள்ளாட்சிகளின் அடிநாதமான கிராமங்களில் ஆண்டுதோறும் குடியரசு தினம், மே தினம், சுதந்திர தினம், காந்தி பிறந்தநாள் என குறிப்பிட்ட சில நாள்களில் ஒட்டுமொத்த கிராமமக்களும்கூடி, அந்தக் கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் ஆலோசித்து, கிராமம் தொடர்பான நல்லது கெட்டதுகள் தொடர்பாக முடிவெடுப்பதுதான் கிராம சபை. இங்கே நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது, மக்கள் நேரடியாக பங்கேற்கிறார்கள் என்பதைத்தான். அத்தகைய கிராமசபை கொரோனா நேரத்தில் தொடர்ந்து ரத்து செய்யப்பட்டது, எடப்பாடி பழனிசாமி முதல்வராக இருந்தபோது. இதையடுத்து, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின், தானே பல கிராமங்களுக்கு நேரில் சென்று கிராம சபையைக் கூட்டினார். அதேபோல நடிகர் கமல்ஹாசனும் தன்னுடைய மக்கள் நீதி மையம் கட்சியின் சார்பில் கிராம சபையைக் கூட்டினார்.

இதேபோல நகர்ப்புற உள்ளாட்சிகளான பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளிலும் மக்கள் நேரடியாக பங்கேற்கும் விதமாக ஏரியா சபை மற்றும் வார்டு கமிட்டி என்று இரு அமைப்புகள் இருக்கின்றன. ஆனால், இதை தமிழகத்தில் முப்பது ஆண்டுகளாக உருவாக்கவே இல்லை. இந்நிலையில், மிகச்சமீபத்தில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க அரசு இதை உருவாக்கி உத்தரவிட்டுள்ளது. ஆனால், கிராம சபை அளவுக்குக்கூட அதிகாரமற்றவைகளாக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதுதான் வேதனை. மக்கள் எந்தவிதத்திலும் ஆள்வோரையும் மக்கள் பிரதிநிதிகளையும் கேள்வி கேட்டுவிடக்கூடாது என்கிற வகையிலேயே, பல் இல்லாத சபைகளாக இந்த அமைப்புகளை உருவாக்கியிருக்கிறது இந்த அரசு.

எப்படியெல்லாம் மக்களின் அதிகாரம் பறிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான பட்டியல் இதோ...

## இடஒதுக்கீடு எங்கே?

1. வார்டு கமிட்டி உறுப்பினர் நியமனத்தில் இடஒதுக்கீடு இல்லாமை: இந்தியாவில் வார்டு கமிட்டி இதுவரை நடைமுறையில் உள்ள எல்லா மாநிலங்களிலும், வார்டு கமிட்டி உறுப்பினர்களின் நியமனத்தில் இடஒதுக்கீடு அமலில் இருக்கிறது. பெண்கள், பட்டியலினத்தவர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவடைந்தோர் என்று எல்லா தரப்பு மக்களையும் உள்ளடக்கி உறுப்பினராக்க ஏதுவாக இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழக அரசின் விதிகளில், வார்டு கமிட்டி உறுப்பினர் நியமனத்தில் இடஒதுக்கீடு பற்றி எந்த குறிப்பும் இல்லை! மூச்சுக்கு முந்நூறு முறை சமூகநீதி பற்றி பேசும் தி.மு.க அரசு, வார்டு கமிட்டியில் இடஒதுக்கீடு பற்றி கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை.

## வெளிப்படைத்தன்மை...?

2. வார்டு கமிட்டி உறுப்பினர்கள் நியமனத்தில் வெளிப்படைத்தன்மை இல்லாமை: வார்டு கமிட்டி உறுப்பினர்களை, ஒவ்வொரு ஏரியாவிலிருந்தும் எந்த அடிப்படையில் (பேரூராட்சி/ நகராட்சி/ மாநகராட்சி) கவுன்சில் நியமனம் செய்யும் என்பது பற்றி விதிகளில் எதுவும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

உதாரணத்துக்கு, 10 ஏரியா சபைகள் கொண்ட ஒரு வார்டில், ஒவ்வொரு ஏரியாவிலும் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்காளர்கள், வார்டு கமிட்டி உறுப்பினர்களாக விருப்பம் தெரிவித்தால், அவர்களில் ஒருவரை எதன் அடிப்படையில் கவுன்சில் தேர்ந்தெடுக்கும்? தமக்கு வேண்டியவர்களையோ அல்லது தங்கள் கட்சிக்காரர்களையோ பெரும்பான்மையாக ஆளுங்கட்சியினர் உள்ள கவுன்சில் நியமனம் செய்துவிட வாய்ப்பு இருக்கிறது. ஆக, இந்த நியமன விவகாரத்தில் வெளிப்படைத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

## மூவாவாயிரத்துக்கு ஒருவர் !

3. வார்டு கமிட்டி உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கான விகிதம்: ஒவ்வொரு ஏரியா சபையில் இருந்தும் ஒருவர்தான் வார்டு கமிட்டி உறுப்பினராக முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது, பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திலிருந்து பலதரப்பட்ட மக்கள் அவரவர் வார்டுகளில் நேரடியாக பங்கேற்பதற்கான வாய்ப்பை வெகுவாகச் சுருக்குகிறது. உதாரணமாக, சென்னையில் கிட்டத்தட்ட ஒரு கோடி பேர் வசிப்பார்கள். ஒவ்வொரு வார்டுக்கும் குறைந்தது 30 ஆயிரம் மக்கள் தொகை இருக்கும். ஆனால், அதிகபட்சம் 10 வார்டு கமிட்டி உறுப்பினர்களே இருக்கமுடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வெறும் 10 பேர்தான் உறுப்பினர் ஆகமுடியும் என்பது 3000 நபர்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் இருக்கிறது. இதில், பன்முகத்தன்மை கொண்ட மக்கள் பிரதிநிதித்துவத்தை அங்கே எப்படி கொண்டு வரமுடியும்?

கேரளா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் வார்டு கமிட்டி உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்தந்த வார்டின் மக்கள் தொகையை பொருத்து நிர்ணயிக்கப்படுகிறதே ஒழிய இப்படிப் பொத்தாம் பொதுவாக 10, 4, 3 எனச் சுருக்கப்படவில்லை.

## குறையும் மக்கள்குரல்

4. வார்டு கமிட்டி கூட்டம் நடத்துவதற்கான குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை: வார்டு கமிட்டி உறுப்பினர்கள் எண்ணிக்கையானது மிகக்குறைவாகத்தான் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கூட்டத்தில் பங்கேற்கக்கூடிய உறுப்பினர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு இரண்டு உறுப்பினர்கள், பேரூராட்சிக்கு ஒரு உறுப்பினர் என்று அறிவித்திருப்பது எவ்வளவு பெரிய அபத்தம். இவ்வளவு குறைவான உறுப்பினர்களுடன் நடத்தப்படும் கூட்டம், அந்தந்த வார்டு மக்களின் குரலாக எப்படி இருக்க முடியும்?

## மூன்றுமாதத்துக்கு ஒரு கூட்டம்!

5. வார்டு கமிட்டி கூட்டுவதற்கான கால அவகாசம் : ஒவ்வொரு வார்டு கமிட்டியும், 3 மாதங்களுக்கு ஒருமுறை கூட்டப்படும் என்று குறிப்பிட்டிருப்பது மக்கள் பிரச்னைகளுக்கு உரிய காலத்தில் தீர்வு காண போதுமானதாக இருக்காது. கர்நாடகா, மேற்குவங்கம் போன்ற மாநிலங்களில் இருப்பதுபோல வார்டு கமிட்டி மாதம் ஒருமுறை கூடி, ஏரியா சபையிலிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை தொடர்ந்து கண்காணித்துச் செயல்பட வேண்டும்.

## பெயரளவுக்கு ஒரு கூட்டம்!

6. ஏரியா சபை மற்றும் வார்டு கமிட்டி கூட்டங்கள் நடத்த தேவையான விதிமுறைகள் இல்லாமை: இக்கூட்டங்கள் பற்றி மக்களுக்கு அறிவிக்கும்முறை, கூட்டத்தின் விவாத பொருள்கள், கூட்டத்துக்குக் குறைந்தபட்சம் எத்தனை நாட்களுக்கு முன்பாக அறிவிப்பு வெளியிட வேண்டும் போன்ற எந்தத் தகவலுமே, விதிகளில் குறிப்பிடப்படவில்லை. இப்படி விதிகளில் தெளிவில்லையெனில், போதிய தகவல் இன்றி கூட்டம் அறிவிக்கப்பட்டு பெயரளவுக்கு நடத்தப்படும் அபாயம் உள்ளது. அவ்வாறு நடத்தப்பட்டால், அது ஏரியா மக்களுக்கான தளமாக எப்படி இருக்கும்? மக்கள் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும் கூட்டமாக அது எப்படி இருக்கும்?

## பல் இல்லாத சபை!

7. உரிமைகள், பணிகள் மற்றும் அதிகாரங்களின் நீர்ப்புத் தன்மை: எல்லாவற்றையும்விட முக்கியமாக கவனிக்கப்படவேண்டியது என்னவென்றால், மக்கள் பங்கேற்பு தளங்களான ஏரியா சபை, வார்டு கமிட்டிக்கான உரிமைகள், பணிகள் மற்றும் அதிகாரங்கள் என்ற பட்டியலில், இந்த மக்கள் சபைகளை வெறும் ஆலோசனை வழங்கும் தளங்களாகவும் திட்டங்கள் தயாரித்து சமர்ப்பிக்கும் தளங்களாகவும்தான் அரசு வரையறுத்திருக்கிறது. மக்கள் தங்கள் ஏரியா மற்றும் வார்டுக்குத் தேவையான எந்த முடிவையும் குழுவாக சேர்ந்து எடுக்கவோ, பயனாளிகள் பட்டியலை இறுதி செய்யவோ, திட்டங்களைக் கண்காணிக்கவோ, கிராமசபையைப் போல அதிகாரம் அளிக்கப்படவில்லை.

-சாரு கோவிந்தன்
மக்களின் குரல்
(Voice of People)

நகர சபை குறித்தான கட்டுரையை முழுமையாக வாசிக்க க்யூ.ஆர் கோடை ஸ்கேன் செய்யவும்.

விகடன்
vikatan.com